**சுருக்கம்**

பாசனம் – திருநெல்வேலி மாவட்டம் – தாமிரபரணி பாசன அமைப்பிலுள்ள கோடகன் கால்வாயின் கீழ் (40வது மடை வரை) பாசனம் பெறும் நிலங்களில் 2011ம் ஆண்டு கார் சாகுபடிக்கு பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து 19.06.2011 முதல் 120 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடுதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணி (ப்பி 2) துறை**

**அரசாணை (வாலாயம்) எண் 233** **நாள் 15.06.2011**

திருவள்ளுவர் ஆண்டு 2042
வைகாசி 32

படிக்கப்பட்டது:

1. நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் கடித எண் தொநுபி / வஅ3 / கோ 3599 / தாமிரபரணி / 2011, நாள் 09.06.2011.
2. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண் காமுஅ / ஔ6 / 823 / 2011, நாள் 09.06.2011.

*****

**ஆணை :**

தாமிரபரணி பாசன அமைப்பிலுள்ள கோடகன் கால்வாயின் கீழ் (40வது மடை வரை) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மற்றும் அம்பாசமுத்திரம் வட்டங்களில் பாசனம் பெறும் 1207 ஏக்கர் நிலங்களில் கார் சாகுபடிக்காக 19.06.2011 முதல் 120 நாட்களுக்கு பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து 201.17 மில்லியன் கன அடிக்கு மிகாமல், தேவைக்கேற்ப, தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**எம். சாய்குமார்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை–2.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி.
நகல்
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, பொதுப்பணித்துறை, சென்னை–5.
முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
பொதுப்பணித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை–5.

**//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்.**